# கதை கதையாம் காரணமாம்





தமிழ் ஐயா வெளியீட்டகம்
ஔவைக்கோட்டம், திருவையாறு - 613 204
தஞ்சாவூர் மாவட்டம்.

## நூல் விவர அட்டவணை

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | கதை கதையாம் காரணமாம் |
| வகை | : | கதைத் தமிழ் ஆய்வு |
| பதிப்பாசிரியர் | : | க. கண்ணகி<br>(பேசி : 94867 42503) |
| முதல்பதிப்பு | : | திருவள்ளுவராண்டு 2046<br>(சூலை, 2015) |
| பதிப்புரிமை | : | தமிழ் ஐயா வெளியீட்டகம்,<br>திருவையாறு |
| நூல் அளவு | : | டெம்மி 1x8 |
| I.S.B.N. எண் | : | 978-81-930633-0-09 (V-IV) |
| எழுத்து அளவு | : | 11 |
| பக்கங்கள் | : | 528 |
| படிகள் | : | 500 |
| கட்டுமானம் | : | சாதாரணம் |
| விலை | : | ரூ. 500/- |
| கணினி அச்சு | : | செ.தீபா (கிரியேட்டர் கிராபிக்சு) சிவகாசி |
| அச்சாக்கம் | : | செல்வவிநாயகம் அச்சகம், சென்னை. |

கோவை கொங்கு நாடு கலை அறிவியல் கல்லூரியுடன் இணைந்து திருவையாறு தமிழ் ஐயா கல்விக் கழகம் **11-07-2015** அன்று நடத்திய அனைத்துலக அளவிலான கதைத் தமிழ் 13- ஆவது ஆய்வு மாநாட்டுக் கருத்தரங்கில் படித்தளிக்கப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு.

## பொருளடக்கம்


| வ. எண். | தலைப்பு | ப.எண் |
|---|---|---|
| | **அ. கதைத்தமிழ் மரபுகள்** | |
| 1. | கதைத் தமிழ் வளர்ச்சியும் வகைப்பாடுகளும் — முனைவர் மு. கலைவேந்தன் | 1 |
| 2. | கதை கதையாம் — முனைவர் சரசுவதி இராமநாதன் | 10 |
| 3. | குழந்தை வளர்ப்பில் கதைகள் — முனைவர் இரா. சாக்குலின் மேரி | 12 |
| 4. | கதை பிறந்த கதை — நா. உமாமகேசுவரி | 19 |
| 5. | தமிழிலக்கியக் கதைகளில் சமயப்பொறை — இரா. நிசா | 24 |
| 6. | குழந்தை இலக்கியக் கதைகளின் வழி குழந்தைகளின் உளவியல் — முனைவர் வெ. சுகந்தா | 31 |
| 7. | கதை வரலாற்றுத் தாக்கம் வருங்கால நோக்கம் — அ. ரோசிலின்மேரி | 37 |
| 8. | தன் வரலாறும் கதை இலக்கியமும் — முனைவர் கு. முத்துக்குமார் | 42 |
| 9. | தொல்காப்பியம் காட்டும் கதைக்கூறுகளும் மாந்தர்களும் — ந. பெரியசாமி | 46 |
| 10. | குறிஞ்சிப்பாட்டில் கதைக்கூறுகள் — முனைவர் இரா.சி.சுந்தரமயில் | 51 |
| 11. | சங்க இலக்கியங்களில் கதைக் கூறுகள் — முனைவர் ச.கௌ.கவிதா | 57 |
| 12. | சங்கப் பாடல்களில் தொன்மக் கதைகள் — ச. அரங்கராசன் | 61 |
| 13. | குறிஞ்சிப்பாட்டில் சிறுகதைக் கூறுகள் — முனைவர் க.பழனிவேல் | 64 |
| 14. | குறுந்தொகை காட்டும் கதை நிகழ்வும் கதைப் போக்குக் கூறுகளும் — முனைவர் அருவி. தேன்மொழி | 71 |

# 13. குறிஞ்சிப்பாட்டில் சிறுகதைக் கூறுகள்

**முனைவர் க.பழனிவேல்**
*உதவிப்பேராசிரியர்*
*தமிழ்த்துறை, சுயநிதிப்புலம்*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி*
*கோயம்புத்தூர்*

## முன்னுரை

தற்கால இலக்கிய வகைமைகளில் அனைவராலும் விரும்பிப் படிக்கக் கூடியதாகவும் சிறந்த பொழுதுபோக்கு இலக்கியமாகவும் திகழ்வது சிறுகதையாகும். பிற இலக்கிய வகைமைகளோடு ஒப்பிடும்போது சிறுகதையானது. எளிதில் புரிந்துக்கொள்ளக் கூடிய வகையிலும், சாமானியர்களால் சுவைக்கத் தக்கதாகவும், அனைத்துத் தரப்பு மக்களின் வரவேற்பினைப் பெறக்கூடியதாகவும் விளங்குகிறது. சிறுகதை கால மாற்றத்திற்கேற்ப தனது வரையறைகளைச் சுருக்கிக் கொண்டு வளர்ந்துள்ளது. பொதுவாக 40,30 பக்கங்களிலிருந்து படிப்படியே குறைந்து இரண்டு, ஒன்று, அரைப்பக்கம் என்று அதன் பக்க வரையறை குறைந்து வந்துள்ளது. மேலும் தற்போதைய சூழலில் இரு நிமிடக் கதைகள், ஒரு நிமிடக் கதைகள் என்று மிகச் சுருங்கி வடிவத்திற்கும் வந்துள்ளதைக் காணமுடிகின்றது. பெரும் வளர்ச்சியும், புதுமையும் அடைந்து வரும் சிறுகதையின் கூறுகள், சங்க இலக்கியங்களில் ஒன்றான குறிஞ்சிப்பாட்டில் பயின்று வந்துள்ளமை குறித்து ஆராய்வதாக இக்கட்டுரையின் பொருண்மை அமைகிறது.

## குறிஞ்சிப்பாட்டு - சிறுகதை

குறிஞ்சிப்பாட்டு, பத்துப்பாட்டு நூல்களில் ஒன்றாக அமைந்துள்ளது. இதனை ஆரிய அரசனான பிரகதத்தனுக்குத் தமிழ்ப் பண்பாடு குறித்து விளக்கும் முகத்தான் அகமரபில் கபிலரால் இயற்றப்பட்டதாக வரலாறு உள்ளது. மலையும் மலை சார்ந்த இடத்தையும், களமாகக் கொண்டு, 261 அடிகளில் இயற்றப்பட்டுள்ளது. இந்நூல் அறத்தொடு நிற்றல் என்ற அகமரபில் இயற்றப்பட்டுள்ளது.

சங்க இலக்கியத்துக்குப் பின் வந்த இலக்கியங்களில் காதலோ வீரமோ செறிவாகக் காட்டப்படவில்லை. போராட்டமும், காதலும் அடிப்படையான இரு சக்திகள் என்றைக்குமான இலக்கிய படைப்புகளின் அடிப்படைகள். இந்த இரு பொது அடிப்படைகளைத்